**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**அசல் வழக்கு எண்.304/2020**

**பி.வா.சா. –2– கிருஷ்ணமூர்த்தி**

**நாள். 01.02.2025**

**பி.வா.சா.2 இன்று ஆஜராகி வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

தாவாவின் பிரதிவாதி என் மனைவி என்றால் சரிதான். வாதி எனது மனைவி மீது எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியாது. வழக்கில் எது மனைவிக்கு ஆதரவாக சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் சரிதான். வழக்கு விபரம் பற்றி தெரியாது நிலையில் எதன் அடிப்படையில் சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் எனக்கு நீதிமன்றத்திலிருந்து வந்த அழைப்பாணையின் பேரில் வந்தேன். என்னிடம் காட்டப்படும் நிருபண வாக்குமூலத்தை நான் படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். மேற்படி நிருபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் நான் சொல்லியது என்றால் சரிதான். நான் 5 வகுப்பு வரை படித்துள்ளேன். நான் கூறியுள்ள விலாசத்திற்கு கதவு எண் இல்லை என்றால் சரிதான். மேற்படி விலாசத்தில் குடியிருந்து வருவதற்கு ஆதாரம் உள்ளதா என்றால் ஆதார் அட்டை உள்ளது. நான் பிறந்தது முதல் மேற்படி விலாசத்தில் குடியிருந்து வருகிறேன். திருமணத்திற்கு பின்னர் எந்த விலாசத்தில் குடியிருந்தேன் என்றால் ராம்நகர் ரவுன் ரோட்டில் வசித்து வந்தேன். மேற்படி ராம் நகரில் சுமார் 10 வருடம் குடியிருந்தேன். திருமணம் 1995 ஆண்டு நடந்தது. வாதி தினேஷ் ஸ்ரீராம் என்பவரை எனக்கு தெரியாது. மேற்படி வாதி சம்பந்தபட்ட யாரையும் எனக்கு தெரியாது. தினேஷ் ஸ்ரீராமின் தகப்பனாரை எனக்கு தெரியாது. சாட்சி மீண்டும் கேள்வி எழுப்பியதும் தெரியும் என்று சொன்னார். ராம் நகரில் உள்ள தாவா சொத்து வீடு என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். எனக்கு 1 மகன் , 1 மகள் ஆவர். எனது மகனுக்கு 2010 ஆண்டு திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். எனது மகன் திருமணத்திற்கு வாதியும் வாதியின் தகப்பனாரும் வந்திருந்தார்களா என்றால் வரவில்லை. மேற்படி திருமணம் நடைபெற்ற சமயம் எனது மனைவியுடன் தான் இருந்தேன் என்றால் சரிதான். மேற்படி திருமணம் நடைபெற்ற சமயம் மேற்படி ராம் நகரில் உள்ள வீட்டில் தான் குடியிருந்தோம் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ 5 நான் தாக்கல் செய்த மனு என்றால் சரிதான். மேற்படி மனுவில் வாதியின் பெயரோ, வாதியின் தகப்பனார் பெயரோ இல்லை என்றால் சரிதான். மேற்படி மனுவில் சொல்லியுள்ள விலாசம் தான் தாவா சொத்து என்றால் சரிதான். மேற்படி மனு தாக்கல் செய்த போது தாவா சொத்து விலாசத்தில் தான் குடியிருந்தேன் என்றால் சரிதான். வாதியின் தகப்பனார் இளவழகனை சுமார் 2015 முதல் தெரியும். அவர் 2015 ம் வருடம் என் தொழில் செய்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது. என்ன தொழில் செய்தார்

என்ற விபரம் தெரியாமலே நான் வாதியின் தகப்பனாரிடம் கடன் கேட்டேன் என்றால் சரிதான். நான் 2015 ல் ராஜேந்திரா தியேட்டாரில் வேலை செய்து கொண்டிருந்தேன். மேற்படி தியேட்டரில் நான் சூப்பரவேசராக வேலை செய்தேன். தாவா சொத்தை கிரையமாக தான் வாதிக்கு பேசிய விபரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. ரூ.50,00,000/- முன்பணமாக வாதியிடம் நானும் எனது மனைவியும் பெற்றோம் என்றால் சரியல்ல. எனது மகள் திருமணம் 2019 ஆண்டு நடைபெற உள்ளதால் 3 வருட  கால அவகாசம் போட்டோம் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் வாதியின் தகப்பனாரிடம் ரூ.5,00,000/- கடன் பெற்றுகொள்ளவில்லை என்றால் சரியல்ல. மேற்படி கிரைய ஒப்பந்தமானது கிரையத்திற்காக ஏற்றுக்கொள்ளப்பட்டதே தவிர கடன் பொறுப்புக்காக ஏற்றப்பட்டது இல்லை என்றாலும் வாதியை ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கத்திற்காக நானும் எனது மனைவியும் பொய்யாக எதிர்வாதம் செய்கிறோம் என்றால் சரியல்ல. மேற்படி கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தபட்ட போது நான் பதிவாளர் அலுவலக்திற்கு வெளியில் இருந்தேன். நான் தான் பத்திர பதிவு அலுவலகத்திற்கு அழைத்து வந்தேன் என்றால் சரிதான். எனது சாட்சியம் எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள தக்கதல்ல என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை – இல்லை.</u>

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

G SARAN
Digitally signed by G SARAN
Date: 2025.02.01 17:29:25 +0530

Additional District Judge(FAC),

Dindigul.